# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடக்கு மாகாணம்

**தரம் 10**

**மூன்றாம் தவணைப்பரீட்சை - 2018**

**சுட்டெண் :** ......................

**வரலாறு I,** **நேரம் : ஒரு மணித்தியாலம்**

## பகுதி I

கவனிக்க :

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 01 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.

01. மகாநாம தேரரினால் எழுதப்பட்டதும் இலங்கையின் வரலாற்றை தொடர்ச்சியாகக் கூறுவதுமான நூல் எது?

1) தீபவம்சம் 2) தாதாவம்சம் 3) மகா வம்சம் 4) போதி வம்சம்

02. பின்வருவனவற்றுள் கோட்டை இராசதானி முதல் கண்டி இராசதானி வரையிலான வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் தூது காவியம் எது?

1) மயூர சந்தேசய 2) பெரகும்பா சிரித்த
3) சீதாவாக்க சட்டன 4) பூஜாவலிய

03. இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவங்களைப் பெற்று இலங்கை பற்றி எழுதியுள்ள எழுத்தாளர்களில் போர்த்துக்கல் நாட்டு இலக்கியவாதி யார்?

1) றொபட் நொக்ஸ் 2) பிலிப்ஸ் பல்டியஸ் 3) ரிபைரோ 4) இபன் பதூதா

04. பனாகடுவ செப்பு சாசனம் பின்வரும் எந்த மன்னனால் எழுதப்பட்டதாகும்.

1) துட்டகைமுனு 2) வசபன் 3) 1ம் பராக்கிரமபாகு 4) 1ம் விஜயபாகு

05. பின்வருவனவற்றுள் சாசனங்கள் பற்றிய தவறான கூற்று எது?

1) சாசனங்கள் மூலம் இலங்கையின் தொடர்ச்சியான வரலாற்றை அறியலாம்.
2) இலக்கிய மூலாதாரங்களில் காணப்படும் செய்திகள் சாசனங்கள் மூலம் உறுதியாகின்றன.
3) சாசனங்களில் குறிப்பிடப்படும் விபரங்கள் அவை எழுதப்பட்ட காலத்துக்குரியவை
4) இலங்கையின் வாணிபம், நீதிபரிபாலன நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் சாசனங்களில் காணப்படுகின்றன.

06. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய கற்சாதனங்கள் கிடைக்கப்பெற்றுள்ள குருவிட்ட, பட்டதொம்பலென பிரதேசத்தில் இரணைமடுப் படிவுக்குரிய கற்கால சரளைக்கற்படிவு

1) இருபத்தெண்ணாயிரம் ஆண்டுகள் பழமையானதாகும்
2) முப்பத்தெண்ணாயிரம் ஆண்டுகள் பழமையானதாகும்
3) எண்பதாயிரம் ஆண்டுகள் பழமையானதாகும்.
4) ஒரு இலட்சத்துக்கு இருபத்தையாயிரம் ஆண்டுகள் பழமையானதாகும்

07. இலங்கையில் பல்வேறு காலநிலை வலயங்களில் தாழ்நில உலர்வலய வெட்ட வெளிப் பாசறைக்கு உதாரணமாக அமையக் கூடியது.

1) அலிகல 2) மினிஹா கல்கந்த
3) பாகியன் கல 4) பெல்லன் பதிபெலஸ்ஸ

08. அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானங்கள் (Cist Burials) இலங்கையில் இதுவரை ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன இவை பின்வரும் எக்காலப் பகுதிக்குரியன?

1) வரலாற்றுக்கு முற்பட்ட காலம் 2) முன்வரலாற்றுக் காலம்
3) வரலாற்றுக் காலம் 4) ஆரம்ப வரலாற்றுக்காலம்

09. கிராமத்து இல்லத்தலைவர்களில் இருந்தே "கமிக" என்பவர் தெரிவு செய்யப்படுகின்றார் இந்த விடயம் பின்வரும் எந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1) பூஜாவலிய 2) சத்தர்மாலங்கார 3) சமந்த பாசதிகா 4) நிகாயசங்கிரஹய

10. வரலாற்றுக் காலத்தில் இலங்கையின் குடியிருப்புக்களின் பரம்பல் தொடர்பாக விளக்கத்தைப் பெறுவதற்கு முக்கியமாக அமையும் காட்டி எது?

1) செங்கபில நிறமான மண் 2) கிராமக் குளங்களின் பரம்பல்
3) தரைத்தோற்ற வேறுபாடு 4) இயற்கை வளங்களின் பரம்பல்

11. பின்வரும் எந்த மன்னன் நரேஸ்வர (மனிதர்களின் கடவுள்) என்னும் பொருள்பட தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

1) 1ம் காசியப்ப 2) துட்டகைமுனு
3) 4ம் மகிந்த 4) குட்ட கண்ண அபய

12. காய்ச்சல் நோய்க்கென தனியான வைத்தியசாலை ஒன்றை கி.பி (914 – 923) இல் 4ம் காசியப்ப மன்னன் நிறுவியதாக வரலாற்று மூலாதாரங்கள் கூறுகின்றன இதற்கு வழங்கிய சிறப்புப் பெயர்

1) பஸ்வந்தி நாமசால 2) உபசக்க ரோகநாச
3) வெஜ்ஜ சாலா 4) சொத்திசாலா

13. வரலாற்றுக்கு முற்ப்பட்ட கால மனிதன் வேட்டையாடுதலில் இருந்து விவசாயத்தில் ஈடுபடுவதற்கு காரணமாக அமைந்த அடிப்படை சூழலியற் காரணி

1) மண்ணின் தன்மையில் ஏற்ப்பட்ட வேறுபாடு
2) வேட்டையாடுதலுக்கு பொருத்தமான விலங்குகள் கிடைக்காமை
3) காலநிலையில் ஏற்பட்ட மாற்றங்கள்
4) மக்கள் தொகை அதிகரிப்பும் பரவலும்

- பின்வரும் ஆங்கில எழுத்துக்கள் குறிக்கும் மன்னர்களைக் கொண்டு 14ம், 15ம் வினாக்களிற்கு விடை தருக

A நான்காம் காசியப்ப B நான்காம் மகிந்த
C மூன்றாம் உதய D இரண்டாம் சேனன்
E ஆறாம் அக்ர போதி F கனிஸ்டதீசன்

14. எந்த மன்னனுடைய ஆட்சிக்காலத்தில் சீனாவுடன் நெருங்கிய தொடர்புகள் ஏற்ப்படுத்திக் கொள்ளப்பட்டது.

1) C 2) D 3) E 4) F

15. அநுராதபுர வீராங்குர விகாரையில் வாழ்ந்த பிக்குகளுக்கு தங்கக் குடங்கள் வழங்கியதாக கி.பி 10 ஆம் நூற்றாண்டைக் சேர்ந்த கல்வெட்டில் குறிப்பிடப்படும் மன்னன்.

1) A 2) B 3) C 4) D

16. ஹோப்பிட்டிகம சந்தையில் நோன்மதி தினத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டோருக்கு தண்டமாக பின்வரும் எந்த விகாரைக்கு விளக்கேற்றுவதற்கு எண்ணெய் வழங்க வேண்டுமென பணிக்கப்பட்டிருந்தது.

1) திஸ்ஸமகராம விகாரை 2) களுதிய பொக்குனை விகாரை

3) மகியங்கனை விகாரை 4) குருநாகல் மெதகம விகாரை

17. புனித தந்ததாது ஹேமமலா இளவரசியாலும் தந்த இளவரசனாலும் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்டமையில் சம்பந்தப்படும் சிறிய கப்பல் தரிப்பிடம்

1) மகாதீத்த 2) லங்கா பட்டினம் 3) சல்வத்தொட்ட 4) தம்பபண்ணி

18. வசபன், மகாசேனன், மகாபராக்கிரமபாகு ஆகிய அரசர்களின் பணிகள் தொடர்பான பொதுவான இயல்பு யாதெனில்

1) இலங்கையை ஒன்றுபடுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டமை
2) தென்னிந்திய படையெடுப்புக்களில் இருந்து நாட்டைப் பாதுகாத்தமை.
3) வெளிநாடுகளில் இருந்து பிக்குகளை அழைத்து குருப்பட்டமளித்தமை
4) நீர்ப்பாசனத்தின் விரிவாக்கத்திற்கு அளப்பரிய சேவை ஆற்றியமை.

19. பின்வருவனவற்றுள் நகர்ப்புற நீர்த்தேவைக்காக முன்னுரிமை கொடுத்துக் காட்டப்பட்ட குளம் எது?

1) திஸ்ஸ வாவி 2) கிரித்தலை வாவி 3) மின்னேரியா வாவி 4) கலாவாவி

20. பண்டைய கட்டிடப் பொறியியலாளர்கள் உயரமான கட்டிடங்களை இடிமின்னலில் இருந்து பாதுகாக்க வஜ்ர சும்மட்ட என்ற உபகரணத்தை பொருத்தி இருந்தனர் இது பின்வரும் எந்த விகாரையில் பொருத்தி இருந்தனர்

1) தூபராம விகாரை 2) அபயகிரி விகாரை

3) ரூவான் வெலிசாய விகாரை 4) ஜேதவனராம விகாரை

21. பண்டைய காலத்தில் நீளத்தை அளப்பதற்கு வியத்த என்ற அலகு பயன்படுத்தப்பட்டது ஒரு வியத்த என்பது இன்றைய அளவீட்டில் எத்தனை அங்குலத்துக்கு சமனாகும்

1) 10 2) 9 3) 8 4) 7

22. பின்வருவனவற்றில் பண்டைய காலத்தில் நிறையை அளக்கப் பயன்பட்ட அளவீடு அல்லாதது எது?

1) உசக்க 2) குஞ்சா 3) மாசக்க 4) சுவர்ணா

- உயர் நிலங்களில் உள்ள மரங்களை வெட்டக் கூடாது
- மரஞ்செடிகளின் முகாமைத்துவத்தில் அரசினால் அமுல் செய்யப்பட்ட சட்டங்களுக்கு அமைய செயற்படும்படி அரச அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கியமை

23. மேற்கூறப்பட்ட இரண்டு சூழல் பாதுகாப்பு சட்டங்களை வகுத்த ஆட்சியாளர்கள் முறையே

1) மூன்றாம் உதய, நான்காம் மகிந்த
2) நான்காம் மகிந்த, ஐந்தாம் காசியப்ப
3) ஐந்தாம் காசியப்ப, நான்காம் மகிந்த
4) மூன்றாம் உதய, ஐந்தாம் காசியப்ப

24. கல்வியறிவில் சிறந்து விளங்கிய பெண்கள் பதுபாச்சிகா என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டதாகக் கூறும் நூல் எது?

1) தம்பியா அட்டுவா கெட்டபத
2) சகஸ்ஸ வத்துப் பகரண
3) ரசவாஹினி
4) பூஜாவலிய

25. பண்டைய காலத்தில் ஒரு பங்கு அரிசியுடன் ஆறு பங்கு நீர் சேர்த்து நோயாளருக்குத் தயாரிக்கப்படும் கஞ்சிக்கு வழங்கிய பெயர்

1) எம்புல் ஹம்பு
2) அத்சுணு
3) யவாகு
4) யாழுஹம்பு

26. வாய்க்கால்களில் மீன் பிடிப்பதற்காக அரசனுக்கு செலுத்திய வரி எவ்வாறு அழைக்கப்பட்டது.

1) தக்கபதி
2) போஜக்கபதி
3) கெதிஅட
4) மதரமஞ்சக்க

27. பின்வருவனவற்றுள் கலிங்கத் தொட்டியின் மூலம் நிறைவேற்றப்பட்ட பிரதான தொழிற்பாடு

1) குளத்தில் இருந்து மேலதிக நீரை வெளியேற்றல்
2) குளத்தில் சேரும் வண்டல் கால்வாயின் ஊடாகப் பாய்வதைத் தடுத்தல்
3) வாவியில் அலையடிப்பால் வாவியின் அணைக்கட்டு அரிப்படைவதைத் தடுத்தல்
4) குளத்தில் மடைக்கதவில் உண்டாகும் நீர் அமுக்கத்தை குறைத்தல்

28. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளை கவனிக்குக

A - இபன்பதூதா என்ற அரேபிய தேசசஞ்சாரி இலங்கைக்கு வந்தமை.

B - 2ம் பராக்கிரமபாகு மன்னனால் கவிசிலுமின நூல் எழுதப்பட்டமை.

C - முதலாம் புவனேகபாகு மன்னன் ஆட்சி பீடம் ஏறியமை

D - மலைநாட்டு பிரதேச ஆட்சியாளன் ஜோதிய என்பவனின் கிளர்ச்சியை அம்புலுகல குமாரன் மூலம் அடக்கியமை

மேற்கூறப்பட்ட வரலாற்று நிகழ்வுகளை அவை நடைபெற்ற கால ஒழுங்கில் கொண்ட விடை எது?

1) B,C,A,D
2) A,B,C,D
3) B,C,D,A
4) A,C,B,D

29. பின்வருவனவற்றுள் ஆறாம் பராக்கிரமபாகுவின் தாயாரின் நினைவாக அமைக்கப் பெற்ற பௌத்த கல்வி நிலையம் எது?

1) காரகல பத்மாவதி பிரிவேனா
2) பெப்பிலியான சுனேத்திராதேவி பிரிவேனா
3) வீதாகம கணானந்தா பிரிவேனா
4) தொட்டகமுவே விஜயபாகு பிரிவேனா

30. கலிங்கமாகன் பொலநறுவையை ஆட்சி செய்து கொண்டிருந்த போது உருகுணரட்டையில் கோவிந்தமலையில் பாதுகாப்பு அரணமைத்து எதிரிகள் தென்பகுதியில் பிரவேசிப்பதை தடுத்த பிரதேசத்தின் தலைவர்

1) சுபதளபதி
2) வீரவாகு
3) சங்க தளபதி
4) புவனேகபாகு (ஆதிபாதன்)

31. மறுமலர்ச்சிக்காலத்தில் சிஸ்டைன் தேவாலயத்தின் பாவுகையில் இறுதித்தீர்ப்பு என்னும் ஓவியத்தை வரைந்து புகழ் ஈட்டியவர்

1) ரபாயல்
2) லியனடோடாவின்சி
3) மைக்கல் ஆஞ்சலோ
4) மெசெக்ஷியோ

32. பின்வருவனவர்களுள் நவீன வானியல் விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர்

1) நிக்கலஸ் கொபர்னிகஸ் 2) ஜொஹெனஸ் கெப்லர்

3) கலிலியோ கலிலி 4) ஐசாக் நியூட்டன்

33. நாடுகாண் பயணங்களின் ஆரம்பத்தில் அதில் ஆர்வம் காட்டிய இரு நாடுகள்

1) போர்த்துக்கல், இங்கிலாந்து 2) இங்கிலாந்து, ஸ்பெயின்

3) போர்த்துக்கல், ஸ்பெயின் 4) பிரான்ஸ் போர்த்துக்கல்

34. கண்டி இராச்சியத்தில் போர்த்துக்கேயர் தங்கள் அதிகாரத்தை ஏற்படுத்துவதற்கு கையாண்ட தந்திரம்

1) கண்டிப் பிரதானிகளை தன்வசப்படுத்தியமை

2) கண்டி இராச்சியத்தில் கத்தோலிக்க சமயத்தை பரப்பியமை

3) கோனப்பு பண்டாரனை அரசனாக்கியமை

4) தங்கள் பாதுகாப்பின் கீழ் இருந்த குசுமாசன தேவிக்கு அரச பதவி வழங்கியமை.

- கீழ்வரும் அட்டவணையில் A தொடக்கம் I வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 35, 36, 37 ம் வினாக்களிற்கு விடையளிக்குக.

| இடம் | அரசன் | போர்த்துக்கேய இராணுவ கப்பித்தான் |
|---|---|---|
| A முல்லேரியா | D முதலாம் இராஜசிங்கன் | G ஜெரோ லோபேஸ் த. சூசோ |
| B கன்னொருவ | E முதலாம்விமலதர்ம சூரியன் | H அல்போன்சோ. டி . சூசா |
| C தந்துரே | F இரண்டாம் ராஜசிங்கன் | I தியாகோ.த.மெல்லோ |

35. கன்னொருவைப் போருடன் தொடர்புடைய கண்டிய அரசனையும் போர்த்துக்கேய இராணுவ கப்பித்தானையும் குறிக்கும் விடை

1) D,G 2) F,I 3) F,G 4) E,H

36. முதலாம் இராஜசிங்கன் போர்த்துக்கேயருடன் போரிட்ட இடத்தினையும் அதன்போது போர்த்துக்கேய இராணுவத்தினை வழிநடத்திய இராணுவ கப்பித்தான் அதிகாரியையும் குறிக்கும் விடை

1) A,H 2) A, G 3) C,H 4) B,I

37. தந்துரைப் போருடன் தொடர்புடைய கண்டி இராசதானி மன்னனையும் போர்த்துக்கேய இராணுவ கப்பித்தான் அதிகாரியையும் குறிப்பிடும் விடை

1) F,G 2) E,G 3) E,H 4) F,H

38. பின்வரும் எந்த விகாரைக் கல்வெட்டில் விகாரைக்குத் தானம் வழங்குகையில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் பத்துக் கிராமத் தலைவர்களும் ஒன்று கூடி அதனை தீர்த்து வைக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது?

1) ஹோப்பிடிகம தூண்கல்வெட்டு 2) களுதியபொக்குனை விகாரைக் கல்வெட்டு

3) வேவல் கட்டிய கல்வெட்டு 4) கொண்டவட்டவான் தூண்கல்வெட்டு

39. யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னனாக கருதப்படும் ஆரிய சக்கரவர்த்தி மன்னன்?

1) பரராஜசேகரன் 2) மார்த்தாண்ட சிங்கை ஆரியன்

3) சங்கிலியன் 4) விஜய கூழங்கை

40. பண்டைய காலத்தில் கறிகளைச் சுவையூட்டுவதற்காகப் பயன்பட்ட முதல் மூன்று பொருட்கள்

1) உப்பு, கடுகு, மிளகாய் 2) சீரகம், உப்பு, மிளகாய்

3) மிளகாய், உப்பு, வெந்தயம் 4) உப்பு, மிளகாய், கொத்தமல்லி

(2x40 = 80 புள்ளிகள்)